# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1956/27 - 2016 මාර්තු මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.03

*1956/27 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

**சனாதிபதியின் பணிப்புரை**

நல்லாட்சியில் மக்கள் அபிலாஷைகளை உரியமுறையில் நிறைவேற்றுமுகமாக அரச சேவையின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் முழு அரசதுறையினதும் சம்பளங்கள், படிகள் உள்ளிட்ட அனைத்து வேதனக் கட்டமைப்புகளையும் மீளாய்வு செய்து முழு அரச துறையினதும் தனியார் துறையினதும் ஊழியப்படைத் தேவைகள் தகுந்தவாறு பூர்த்தி செய்யப்படுவதை இலகுபடுத்துவதற்காக ஆளணிக் கற்றாராய்வினை மேற்கொண்டு அதற்குப் பொருத்தமாகும் தேசிய சம்பளக்கொள்கை ஒன்றை வகுத்தமைப்பதிலும், அமுல்படுத்துவதிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கி உதவுவதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் 2 ஆவது துணை உறுப்புரைக்கமைய அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து அதிமேதகு சனாதிபதி அவர்களால் விசேட முகவராண்மையொன்று தாபிக்கப்படல்.

1. திரு. கே. எல். எல். விஜேரத்ன அவர்கள்
2. திரு. நிமல் பண்டார அவர்கள்
3. திரு. தயாநந்த விதானகமச்சி அவர்கள்
4. திரு. ஜே. சரித்த ரத்வத்தே அவர்கள்
5. பேராசிரியர் கித்சிறி மடபாத்த லியனகே அவர்கள்
6. திரு. லெஷ்லி ஷெல்டன் தேவேந்திர அவர்கள்
7. திரு. சுரேஷ் ஷாஹ் அவர்கள்
8. திரு. சனத் ஜயந்த எதிரிவீர அவர்கள்
9. திரு. வீ. ரெகுநாதன் அவர்கள்
10. திரு. கமால் முஸ்தபா அவர்கள்
11. பேராசிரியர் குணபால நாணயக்கார அவர்கள்
12. திரு. நந்தபால விக்ரமசூரிய அவர்கள்
13. திருமதி சுஜாத்தா குரே அவர்கள்
14. திரு. ஜெரீ ஜயவர்த்தன அவர்கள்
15. திரு. எஸ். தில்லைநடராஜா அவர்கள்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

16. கலாநிதி அநுர ஏக்கநாயக்க அவர்கள்
17. திரு. செம்பக்குட்டிகே சுவர்ணஜோதி அவர்கள்
18. திரு. பி. கே. யூ. நிலந்த பியரத்ன அவர்கள்
19. திரு. என். எச். பத்திரண அவர்கள்
20. திரு. எச். ரி. தயாநந்த அவர்கள்
21. திரு. ரி. பீ. மடுவேகெதர அவர்கள்
22. வைத்தியர் விமல் கரந்தகொட அவர்கள்
23. திரு. ஏ. கதிரவேலுப்பிள்ளை அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !

புதிய அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நடுத்தரகால பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் இலக்குகளை அடையும் செயல்முறையின் போது அரசாங்க மற்றும் தனியார்துறை மனிதவளத் தேவைகளைக் கருத்திற்கொண்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை அடைவதற்காக வினைத்திறனுடன் அரச சேவை வழங்குதலையும், அபிவிருத்தி செயன்முறையை இலக்குபடுத்துவதையும், தேவைப்படும்போது ஒழுங்குபடுத்துவதையும் பயன்மிக்கவகையில் நிறைவேற்றக்கூடிய நிபுணத்துவங்களைக் கொண்ட ஆளணிகளை அரச சேவையில் சேர்த்துக்கொள்வதற்கும் அவர்களை அரச சேவையில் தக்கவைத்துக் கொள்வதற்கும் தேவையான ஊக்குவிப்புப் பொதியொன்றை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கின்றமையினாலும்,

ஒட்டுமொத்த அரச துறையினதும், தனியார் துறையினதும் ஊழியர்களை திருப்தியுடையவர்களாகவும் பேரார்வம் மிக்கதானவர்களாகவும் ஆக்குவதற்கான தேவையை அரசாங்கம் அங்கீகரித்திருப்பதனாலும்,

மனித வளத்தை பல்வேறு துறைகளுக்கும் உரியதாக ஈடுபடுத்தும்போது பொருளாதாரத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களை மனதிலிருத்தி, சர்வதேச ரீதியில் ஊழியப்படையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் ஊழியச் செலவுகளை இலங்கைக்கு வாய்ப்பான போட்டிகர மட்டத்திற்கு கொண்டு வருதல் அவசியமெனக் கருதப்படுவதனாலும்,

ஊழியப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் போது ஒட்டுமொத்த அரசதுறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலும், அரச துறையினுள்ளான பல்வேறு துறைகளுக்கிடையிலும் பாதகமான போட்டிகரத்தன்மை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பது உணரப்பட்டிருப்பதனாலும்,

மிகச்சிறந்த உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் அடைவதற்காக அரச சேவையை செயலாட்சி செய்யும் தேவையைப் போன்று தனியார் துறையின் ஊழியப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் உள்ள தடைகளை நீக்குவதற்கான தேவையை அரசாங்கம் உணர்த்துள்ளமையினாலும்,

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் வங்கிகள் முதலிய அரை அரச நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு, அரசாங்க சேவையில் அதே அளவு சமமான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளோடு கிட்டத்தட்ட அதேபோன்ற பொறுப்புகளை ஆற்றுகின்றவர்களைவிட பெரிதும் வேறுபட்ட சம்பளங்களும் வேதனங்களும் செலுத்தப்படுவதனால், அரசாங்கத் திணைக்களங்களுக்குத் தொழில்வாண்மையாளர்களை ஆட்சேர்ப்பதிலும் தக்கவைத்துக் கொள்வதிலும் சிரமங்கள் அனுபவிக்கப்படுகின்றமையினாலும்,

தற்போதைய ஆட்சேர்ப்பு மற்றும் சம்பளங்கள் மற்றும் வேதனங்களை நிர்ணயித்தல் நடைமுறைகளையும் வினைத்திறன் மிக்கதும் பயனுறுதி மிக்கதுமான சேவை வழங்குதலுக்கு அமைவாக அரசதுறை நிறுவனங்களின் ஆளணித்தேவைகளை நியாயபூர்வமானதாக்குவதற்கான தேவையையும் அரசாங்கம் அறிந்திருப்பதனாலும்,

அரசின் பொருளாதாரக் கொள்கையை மிகவும் காத்திரமான முறையில் செயற்படுத்தி பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்குள் அரச துறையினது கடமைப்பொறுப்பை வினைத்திறமையுடன் நிறைவேற்றுவதற்காகவும், தற்காலத்தில் போன்று எதிர்காலத்திலும் அரச சேவைக்குத் தேவைப்படும் முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் நிபுணத்துவ அறிவுடைய அனுபவசாலிகள் மற்றும் மிக விசேட நிபுணத்துவங்களைக் கொண்டுள்ள தொழில்வாண்மைத்துவ ஆளணிகளுக்கு தனித்துவமான சம்பள முறைமையை அறிமுகப்படுத்துவதன் ஊடாக அவர்களை அரசதுறைக்கு கவர்ந்தெடுப்பதற்கு விசேடமான திறமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் தொழில் நிபந்தனைகளில் செய்ய வேண்டிய மாற்றங்களை அறிமுகப்படுத்துவதற்குமான தேவையை உணர்ந்திருப்பதனாலும்,

உற்பத்தித் திறனையும் போட்டித்தன்மையையும் மேப்படுத்தக்கூடிய பகுதிநேர அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான தொழில் திட்டத்தை அறிமுகஞ் செய்தலும் தற்போது நிலவும் தொழில்வாய்ப்பின்மை வீதங்களுக்கும் சனத்தொகையின் வயதடைதலுக்கும்

அமைய நிரந்தரமான சேவைக்கு உரிய சேவைக்காலத்தைவிடக் குறைந்த சேவைக்காலம் சேவையாற்ற விரும்பும் நிபுணத்துவங்களைக் கொண்ட ஊழியர்களை கவர்ந்தெடுப்பதன் மூலம் மாற்றுத் தொழில் நிபந்தனைகளை உருவாக்குதலும் பொருத்தமானதெனக் கருதப்படுவதனாலும்,

அரசின் மீண்டுவரும் செலவுகள் மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதைக் கருத்திற் கொண்டு சில அரச நிறுவனங்களினால் தற்போது செயற்படுத்தப்படும் பணிக்கொடைகள் உள்ளிட்ட பல்வேறு ஊக்குவிப்பு முறைகள் மற்றும் கொடைமுறைகளை மீளாய்விற்கு உட்படுத்தி நிதிசாராத ஊக்குவிப்புகளை வழங்குவதற்கு அரசின் நிதிய வரையறைகளினுள் பின்பற்றப்படுவதற்கான மிகவும் பொருத்தமான முறைகளுக்கான தேவையை உணர்ந்துள்ளமையினாலும்,

தற்போது இருக்கும் சம்பளங்கள் மற்றும் படிகள், பதவியணிகள் மற்றும் சேவை நிலைமைகள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், பதவி உயர்வுத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணங்கள் தொடர்பில் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்த்தலுக்கான தேவையை உணர்ந்துள்ளமையினாலும்,

பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் முழுச்சமூகத்திற்கும் சென்றடைவதனை உறுதிப்படுத்துவதற்காக தற்போதைய சமூக பொருளாதார மற்றும் அரச நிதி நிலைமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களுக்குப் பொருத்தமான குறைந்தபட்ச வேதனத்தையும், தொழில் பாதுகாப்பையும், அத்தியாவசிய நலன்புரி வசதிகளையும் உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கான தேவையை அரசாங்கம் இனங்கண்டுள்ளமையினாலும்,

மேலே கூறப்பட்ட அனைத்துக்கும் மிக உயர்ந்த முன்னுரிமை வழங்கி பின்வரும் நோக்கங்களுக்காக சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு (இதனகத்துப்பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பிடப்படும்) ஒன்றை தாபிப்பதற்கு அரசாங்கம் விரும்புவதனாலும்,

(அ) மாகாண சபைகள் உட்பட ஒட்டுமொத்த அரசதுறையின் ஒவ்வொரு நிறுவனத்திலும் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணிகளை மீண்டும் மீளாய்வுக்குட்படுத்தி அத்தகைய நிறுவனம் ஒவ்வொன்றிற்கும் அதிகூடிய ஆளணியை முன்மொழிதல் ;

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு வசதி ஏற்படுத்தும் வகையில் அரசாங்க சேவையில் தற்போதுள்ள முகாமைத்துவ முறைமைகள் மற்றும் நிர்வாக நெறிமுறைகள் அகியவற்றில் அடிப்படை மாற்றமொன்றைக் கொண்டுவருவதற்கான முன்மொழிவுகளைப் பரிந்துரைத்தலும் அரசாங்க சேவையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் அவற்றின் செயலாற்றுகையை மதிப்பிடுதலும் ;

(இ) நல்லாட்சி எண்ணக்கருவின் அடிப்படையிலமைந்த தற்போதைய துரித பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய அரசதுறையின் சம்பளங்கள், படிகள் மற்றும் வருடாந்த சன்மானக் கொடுப்பனவுகள், உற்பத்தித்திறன் நிலை வட்ட கொடுப்பனவுகள் போன்ற பல்வேறு ஊக்குவிப்பு காரணிகளை தீர்மானிப்பதற்கும், தயாரிப்பதற்குமான புதிய முறைமையொன்றைத் தயாரித்தல் ;

(ஈ) மேற்குறித்த முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனஞ்செலுத்தி மாகாணப் பொதுச்சேவை அடங்கலாக அரசசேவையும், அரச கூட்டுத்தாபனங்கள், அரச தொழில்முயற்சிகள், நியதிச்சட்ட சபைகள் உட்பட பகுதியளவான அரசதுறைகளும் இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச வங்கித்துறை ஆயுதப்படையினர், பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றின் ஆளணியினரின் சம்பளங்கள், உழைப்பூதியச் செலவுகள் திரட்டு நிதியத்திற்கு செலச்சுமையாகக் கருதவேண்டியதாக சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட நிறுவனங்களுக்காகவும் பொருத்தமான சம்பளங்கள் மற்றும் படிகள் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு உகந்த விதப்புரைகளைச் சமர்ப்பித்தல் ;

(உ) மேலே (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் அடங்கலாக ஏனைய ஒட்டுமொத்த அரசதுறை தொடர்பிலும் தனியார்துறை தொடர்பிலும் மனிதவளத்தைப் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய பாதகமான போட்டித்தன்மையைத் தவிர்ப்பதற்காக பொருத்தமான தேசிய சம்பளக் கொள்கையொன்றை விதந்துரைத்தல் ;

(ஊ) மேலே (உ) வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேசிய சம்பளக் கொள்கையொன்றைத் தயாரித்து அமுல்படுத்தும் வரைக்கும், இதற்கு முன்னிருந்த சம்பள ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமையவோ அல்லது 06/2006 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 30 ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ஆகியவற்றை அமுல்படுத்தும் போது இனங்காணப்பட்டுள்ள சம்பளங்கள், ஆளணிகள் மற்றும் சேவைப் பிரமாணங்கள் தொடர்பான

பிரச்சினைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புகள் காரணமாக தற்போது எழுந்துள்ளதாக இனங்காணப்படும் சம்பள முரண்பாடுகளை குறைப்பதற்காகச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் நடுத்தீர்ப்பாளராக செயற்படுதலும், அதன்போது அனைத்து சந்தர்ப்பங்களிலும் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் தேசிய சம்பளக் கொள்கையை இலக்காக கொண்டு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்தலும் ;

(எ) அரச சேவையில் இடையிடையே மேற்கொள்ளப்படும் சம்பள அதிகரிப்புகளுக்கு இணையாக ஓய்வுச் சம்பளக் கொடுப்பனவின்போது அல்லது ஓய்வுச் சம்பள மீளமைப்புகளின்போது கையாளப்படவேண்டிய திறமுறை தொடர்பான விதப்புரைகளைச் சமர்ப்பித்தல் ;

(ஏ) அரச சேவைக்காகப் பங்களிப்பு ஓய்வுச் சம்பளத் திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கான திறமுறையொன்றைத் தயாரித்தலும் விதப்புரைகளைச் சமர்ப்பித்தலும் ;

ஆகிய நோக்கங்களுக்காக தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவொன்றை (இதனகத்துப்பின்னர் ஆணைக்குழு என குறிப்பிடப்படும்) நிறுவுவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பதனாலும்,

மேலே இனங்காணப்பட்டுள்ளவாறு குறித்த ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்படும் கருமங்கள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுதல் பொதுமக்களின் நன்மைக்காக உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டுமென நான் கருதுவதனாலும்,

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட கருமங்கள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 02 வருட காலத்திற்கு தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் 2 ஆவது துணை உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் தாபிக்கின்றேன்.

மேலும், உங்களது விவேகம், திறமை, நேர்மை என்பன தொடர்பில் மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு இதன் மூலம் சொல்லப்பட்ட,

1. திரு. கே. எல். எல். விஜேரத்ன அவர்கள்
2. திரு. நிமல் பண்டார அவர்கள்
3. திரு. தயாநந்த விதானகமச்சி அவர்கள்
4. திரு. ஜே. சரித்த ரத்வத்தே அவர்கள்
5. பேராசிரியர் கித்சிறி மடபாத்த லியனகே அவர்கள்
6. திரு. லெஷ்லி ஷெல்டன் தேவேந்திர அவர்கள்
7. திரு. சுரேஷ் ஷாஹ் அவர்கள்
8. திரு. சனத் ஜயந்த எதிரிவீர அவர்கள்
9. திரு. வீ. ரெகுநாதன் அவர்கள்
10. திரு. கமால் முஸ்தபா அவர்கள்
11. பேராசிரியர் குணபால நாணயக்கார அவர்கள்
12. திரு. நந்தபால விக்ரமசூரிய அவர்கள்
13. திருமதி சுஜாத்தா குரே அவர்கள்
14. திரு. ஜெரீ ஜயவர்த்தன அவர்கள்
15. திரு. எஸ். தில்லைநடராஜா அவர்கள்
16. கலாநிதி அநுர ஏக்கநாயக்க அவர்கள்
17. திரு. செம்பக்குட்டிகே சுவர்ணஜோதி அவர்கள்
18. திரு. பி. கே. யூ. நிலந்த பியரத்ன அவர்கள்
19. திரு. என். எச். பத்திரண அவர்கள்
20. திரு. எச். ரி. தயாநந்த அவர்கள்
21. திரு. ரி. பீ. மடுவேகெதர அவர்கள்
22. வைத்தியர் விமல் கரந்தகொட அவர்கள்
23. திரு. ஏ. கதிரவேலுப்பிள்ளை அவர்கள்

ஆகிய நீங்கள் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக என்னால் இத்தால் நியமிக்கப்படுவதுடன், மேலே (அ) விலிருந்து (ஏ) வரையான கருமங்களைச் செயற்படுத்த அவசியமானவாறான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இத்தால் நான் உங்களைப் பணிக்கின்றேன்.

அத்துடன், திரு. கே. எல். எல். விஜேரத்ன அவர்களை மேற்குறித்த ஆணைக்குழுவின் தவிசாளராகவும், திரு. அசோக்க ஜயசேகர அவர்களை ஆணைக்குழுவின் செயலாளராகவும் இத்தால் நான் நியமிக்கிறேன்.

மேலும், இத்தால் ஒப்படைக்கப்படும் கருமங்களை நிறைவேற்றுவதற்காக தேவைப்படக்கூடியவாறான விசாரணைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் விடயங்களை புலனாய்வு செய்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்குமான அதிகாரத்தை இத்தால் ஆணைக்குழுவுக்கு வழங்குகிறேன்.

அத்துடன், ஆணைக்குழுவினால் ஆலோசனைகள் வழங்கப்படக்கூடிய அல்லது தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக உதவி கோரக்கூடிய அனைத்து அரச அலுவலர்களும், அத்தகைய வேறு நபர்களும் அந்த செயற்பாடு தொடர்பில் உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைய செயற்படவேண்டுமெனவும். வழங்கக்கூடிய அனைத்து உதவிகளை வழங்க வேண்டுமெனவும் அளிக்கக்கூடிய அனைத்துத் தகவல்களை அளிக்க வேண்டுமெனவும் இத்தால் நான் அனைத்து அரச அலுவலர்களையும் ஏனைய நபர்களையும் விதித்துப் பணிக்கிறேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியசு அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரைக்கமைய 2013.10.31 ஆந் திகதி சனாதிபதியின் பணிப்புரையின் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவை இத்தால் இல்லாதொழிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சினையின் கீழ் இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு மாச்சு மாதம் 3 ஆந் திகதி கொழும்பில் என்னால் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.